Registered as a Newspaper in Ceylon ✶ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 117

National Tamil Daily தேசிய தினசரி

(8-6-65)

விசுவாவசு வைகாசி 26 வளர்பிறை 7 செவ்வாய்க்கிழமை

## சர்வதேச அரிசி வருடம்

கொழும்பு, திங்கள்

சில நாடுகளில் அரிசி உற்பத்தி அதிகமாக இருந்தபோழுதிலும், பலநாடுகளில் விளைச்சல் மோசமாகவே காணப்படுகிறது. ஒரு நாட்டில் உற்பத்தியாகும் அரிசி அந்த நாட்டுக்கே போதாமல் இருக்கிறது, இத்தப்பிரச்னைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தும் முகமாக அடுத்த வருடம் "அரிசி வருடமாக" கொண்டாடப்படவிருக்கிறது.

1966-ம் வருடத்தை சர்வதேச அரிசி வருடமாகக் கொண்டாடுவதென ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்திருக்கிறது.

இத்தகவலை வெளியிட்ட ஐக்கிய நாடுகள் உணவு உற்பத்தி அதிகாரியான டாக்டர் பனச.ல; விவசாயத்துக்கு புத்துயிரளித்து விளைச்சலைப் பெருக்கும் நோக்கத்துடன்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்.

சர்வதேச அரிசி வருடத்தை வெற்றிகரமாக்குவதற்கு ஐ. நா, விசேஷ நிதியை ஒதுக்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# தனியார் பாடசாலைகள் தொடர்ந்து இயங்கும்

## கையேற்பதில்லையென அரசாங்கம் முடிவு

கொழும்பு, திங்கள்

தனியார் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கமாட்டாது. தனியார் பாடசாலைகளைக் கையேற்பதில்லையென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. தனியார் பாடசாலைகள் விஷயமாகக் கடந்த சில நாட்களாக அலரி மாளிகையில் கல்வி மந்திரியும், கல்வி இலாகா அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்திவந்தனர். இந்தப் பேச்சுவார்த்தைகளின் முடிவிலேயே தனியார் பாடசாலைகளைக் கையேற்பதில்லையென முடிவுசெய்யப்பட்டது. நான்கு வருடத்துக்கு ஒருமுறை தனியார் பாடசாலைகளின் நிலையைப் பரிசீலனைசெய்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது. தனியார் பாடசாலைகளின் நிலைமையை நான்கு வருடத்துக்கு ஒருமுறை பரிசீலனை செய்வதுபற்றிப் புதிய கல்வி மசோதா ஒன்று தயாரிக்கப்படும்.

## கூட்டுக்கல்வி ஒழிக்கப்படுமா?

### கல்வி இலாகா ஆராய்கிறது

கொழும்பு, செவ

அரசாங்க பிரதம பாடசாலைகளிலும், பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் இணைக்கல்வி முறையை ஒழிப்பது பற்றி கல்விமந்திரி திரு ஐ.எம்.ஆர். ஏ. இரியகொலை ஆலோசனை செய்துவருகிறார்,

பௌத்த சங்கத்தின் பிரமுகர்களும் பிறசமய ஸ்தாபனங்களும், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் இணைக்கல்வி முறையை நீக்குமாறு மந்திரியிடம் பல தடவைகளில் கேட்டுக்கொண்டதன் பெயரிலேயே மந்திரி இதுபற்றி ஆலோசனை நடத்திவருகிறார். ஆண்களும் பெண்களும் தனித்தனி பாடசாலைகளில் கல்விபயிற்றப்பட வேண்டும் எனவும் இணைக் கல்வி சமய, கலாச்சார டண் பாடுகளுக்கு முரணானதெனவும் கல்வி மந்திரியிடம் தெரிவிக்கப்பட்டதாம். கூட்டுக் கல்வி முறையால் கடந்தசில வருடங்களில் மாணவர்களுக்கிடையே மட்டுமில்லாது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையில் கூட துர்நடத்தைகள் நடைபெற்றது கண்டிக்கப்பட்டதாகவும் மந்திரியிடம் தெரிவிக்கப்பட்டது.

கல்வி மந்திரி கூட்டுக்கல்வி மற்றிக் குறிப்பிடுகையில் தான் அதற்கு எதிரான கருத்துடையவர் எனவும் கூட்டுக் கல்வியை ஒழித்துவிடுவது பற்றி இன்னும் முடிவுசெய்யப்படவில்லை எனவும் இதுபற்றி. கல்வி இலாகா அதிகாரிகள் ஆலோசனை நடத்திவருவதாகவும் மந்திரி தெரிவித்தார்.

## பல்கலைக் கழகத்துடன் நேரடித் தொடர்பு

கொழும்பு, திங்கள்

பல்கலைக்கழகத்தில் சேருவதற்கு புதியமுறை ஒன்று கையாளப்படவிருக்கிறது. புதிய முறையின்படி ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு பரீட்சையில் சித்தியடைபவர்கள் பாடசாலைகள் மூலமாக பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. பரீட்சையில் சித்தியடைந்ததும் தாமாகவே பல்கலைக்கழக அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம் எனவும் பாடசாலைகள் மூலம் தொடர்பு கொள்ளத் தேவையில்லையெனவும் பல்கலைக்கழக உபவேந்தர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## குடிவகை லைசென்ஸ் இல்லை

கொழும்பு, திங்கள்

முன்னர் பதவிவகித்த கூட்டரசாங்கம் வழங்கவிருந்த ஆறு புதிய குடிவகை லைசென்ஸுகளை வழங்குவதில்லை என தேசிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## வடமராட்சியில் அமுலுக்குவரவிருக்கும் குழாய்நீர்த் திட்டம்

### 20,000 பேர் பயனடைவர்

கொழும்பு, திங்கள்

வடமராட்சியிலுள்ள அத்துரு குழாய் நீர்த்திட்டம் விரைவில்; அமுலுக்கு கொண்டுவரப்படுவதாகத் தெரிகிறது. இதுபற்றி கரவெட்டி கிராமமுன்னேற்றச் சங்கத்தாருக்கும் ஒன்று ஸ்தல ஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வத்தை அதன் தலைவர் திரு. சி. செல்லையா தலைமையில் சந்தித்து இத்திட்டம் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறது.

இந்த குழாய்நீர் திட்டம் அமுலுக்குவந்தால் கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மேற்கு துன்னாலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 20,000-க்கு அதிகமான மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கக்கூடியதாக இருக்கும். மேற்படி மூன்று கிராமங்களும் இதுவரைகாலமும் கோடைகாலங்களில் தண்ணீர் கிடையாமல் பெரிய கஷ்டத்துக்குள்ளாகவிருக்கின்றன.

மக்களை எதிர்நோக்கும் கஷ்டங்கள் சம்பந்தமாக திரு. செல்லையா மந்திரிக்கு எடுத்துக் கூறி ஏற்கனவே அதற்கான ஒரு திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் அமுல்செய்யப்படவில்லையென்பதையும் சுட்டிக்காட்டினார்.

விபரங்களை அறிந்துகொண்ட மந்திரி திரு. திருச்செல்வம் இத் திட்டத்தை அமுல்நடத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருப்பதாகவும் மேலும் தெரியவருகிறது.

## கிளிநொச்சியில் திருக்குறள் மகாநாடு

கிளிநொச்சி, திங்கள்

தமிழ்மறைக் கழகத்தின் திருமுன்றாவது திருக்குறள் மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சியில் ஜெட்றிமோர் மைதானத்தில் நடைபெறும் இந்த மகாநாட்டில் மதுரை தியாகராசர் கல்லூரியைச் சேர்ந்த திரு. ஒளவை துரைநடராஜன் முக்கியபேச்சாளராகக்கலந்துகொள்கிறார்.

வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிகளுக்கு தமிழ்மறைக் கழகத் தலைவரும், கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. கா. பொ. இரத்தினம் தலைமைவகிப்பார், கூட்டம் ஆரம்பமாகுமுன் ஏட்டுச்சுவடி ஊர்வலம் நடைபெறும். அன்றைய தினம் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கமும், பண்டிதர் க. சீனித்தம்பி, பண்டிதர் செதுரைசிங்கம், ஒளவை துரை நடராஜன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

திரு. சி. சிவகுருநாதன் தலைமையில் கவியரங்கு நடைபெறும்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளுக்கு ஜோதிட க. வித்தியானந்தன் தலைமைவகிப்பார், பண்டிதர் வேந்தனார், பண்டிதர் க. மயில்வாகனம், வித்துவான் சி. ஆறுமுகம், ஒளவை துரை நடராஜன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். இலங்கைவானொலித்தமிழ்நிகழ்ச்சிஅதிகாரி க. செ. நடராசா தலைமையில் கவியரங்கு நடைபெறும்.

நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. வி. ஜெயசிங் தலைமையில் கவியரங்கு நடைபெறும், திருவாட்டி பரஞ்சோதியம்மாள் இராசமாணிக்கம் திருக்குறள் விருந்தளிப்பார்.

மூன்றும் நாள் நிகழ்ச்சிகளுக்கு உதவிக் கல்வி டைரக்டர் திரு எஸ். தணிகாசலம் தலைமைவகிப்பார். வித்து. க. வேலன், டாக்டர் நந்தி, ஒளவை துரை நடராஜன் ஆகியோர் அன்று சொற்பொழிவாற்றுவார்கள், கருத்தரங்கமும் கவியரங்கமும் நடைபெறும்.

## சமஷ்டி கிடைக்காவிடினும் கொள்கையை விடமாட்டோம்

### மாவட்டசபைகள் மூலமே நம்மை நாம் ஆளவழிபிறக்கும்

#### திரு. செல்வநாயகம் விளக்கம்

மாவிட்டபுரம், திங்கள்

"தமிழரசுக்கட்சி தோன்றியிருக்காவிட்டால் இன்று தமிழ் பேசும்மனம் என்றொரு இனம் இருந்திருக்கமாட்டாது" என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்தெற்குவீதியில் அமைக்கப்பட்ட வன்னியசிங்கம் அரங்கில் தமக்கும் ஏனைய தமிழரசுக்கட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டம் திரு. ச. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது கூட்டத்திற்கு முன் காங்கேசன்துறைப் பட்டின சபை முன்றலிலிருந்து பிரதானவீதி வழியாக திரு. க. துரைரத்தினம் எம். பி. தலைமையில் ஓர் ஊர்வலமும், கொல்லங்கலட்டி விநாயகர் கோவிலுக்கு அருகாமையிலிருந்து பிரதானவீதி வழியாக திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் ஓர் ஊர்

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று

இன்று மாலை அமெரிக்க தூதரக கலாச்சார நிலையத்தில் பல்கலைக்கழக சட்டக் கல்லூரி விரிவுரையாளர் டாக்டர் ஜேம்ஸ்மில்லர் தற்காலிக நீதிபாலன முறைகள் என்பதுபற்றி உரைநிகழ்த்துவார். கூட்டத்துக்கு வழக்கறிஞர் திரு ரி. முத்துசாமிப்பிள்ளை தலைமை வகிப்பார், அமெரிக்க கலாச்சார நிலாத்தினதும் யாழ்ப்பாணம் வழக்கறிஞர் சங்கத்தினத்தினதும் ஆதரவில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

●

தெல்லிப்பழை முருகமூர்த்தி கோயில் சம்பூரண ராமாயண விரிவுரையில், மாலை 7 மணி முதல் ஸ்ரீ மணிபாகவதர், "சூர்ப்பனகை கர்வபங்கம்" என்னும் சரிதை கலாகாலக்ஷேபம் செய்வார். இரவு 10-30 மணி முதல், சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் "அநுசூயா" எனும் சரிதை கதாகாலக்ஷேபம்.

### மணிவாக்கு

ஆங்கில இலக்கியத்தைக் கைவிட்டுவிட வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. அதில் உள்ள மிகவும் உயர்ந்தவற்றை நம்முடைய பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்த்திருக்க வேண்டும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 26 உ (8-6-65)


## தமிழில் விஞ்ஞானம்

"விஞ்ஞானக் கலைச் சொல்லாக்கத்தில் ஈழமும் தமிழ்நாடும் ஒன்றுபடவேண்டுமென்றும் அப்பொழுதுதான் இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞான வளர்ச்சியோடொட்டி தமிழ்மொழியிலும் விஞ்ஞான அறிவு பெருகுவதற்கு வேண்டிய விஞ்ஞான நூல்கள் தோன்ற முடியும்" என்று 'நவீன இரசாயனம்' என்ற விஞ்ஞான நூல் வெளியீட்டு விழாவில் பேசிய திரு. ஹன்டி பேரின்பநாயகம் கூறிய யோசனை கல்விமான்களும் அறிஞர்களும் சிந்திக்க வேண்டிய விஷயம்.

இதே வைபவத்தில் பேசிய யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம், "தென்னிந்த தமிழ் கலப்புடையது. ஈழத்தமிழ் தனித்தமிழ் என்று கூறி புதிய கலைச் சொல்லாக்கங்களில் நாம் தனித்து நிற்பது எமது அறிவு வளர்ச்சிக்குப் பெரிய தடையாயிருக்கிறது" என்று கூறியிருப்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம்.

விஞ்ஞானக்கலைச் சொல்லாக்கத்திலும் மற்றும் கலைச் சொல்லாக்கத்திலும் தமிழ்நாடு எமக்குமுன் முயற்சி செய்திருக்கிறது. ராஜாஜியும் மற்றும் அறிஞர்களும் பொதுவிஞ்ஞானம், பௌதீகம், இரசாயனம், தாவரசாஸ்திரம், விலங்குகள் சாஸ்திரம் ஆட்யவை சம்பந்தப்பட்ட நூல்களை தமிழில் மொழிபெயர்த்திருப்பதுடன் அவற்றுக்கான கலைச் சொற்களையும் ஆக்கியுள்ளனர், அதில் வெற்றியும் ஓரளவு கண்டுள்ளனர். நம்நாட்டில் இது புதுமுயற்சிதான். எங்கள் நாட்டில் கலைச்சொல் அகராதி தயாரிக்கப் பட்ட போது தனிப்பட்ட முறையிலேயே தயாரிக்கப்பட்டது. தமிழ்நாட்டுடன் கலந்தாலோசனை செய்யப்படவில்லை. எங்கள் கலைச்சொல் அகராதி தூய தமிழ் அகராதியென்றும் தனிச்சொல் அகராதியென்றும் நாம் தனிச்சிறப்புக் கொண்டோம். தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட விஞ்ஞான, கலைச் சொல் அகராதிகள் ஓரளவு கலப்புடையவை யென்றும் நாம் கூறிக் கொள்கிறோம். தமிழர்கள் தென்னிந்தியாவில் நான்கு கோடிக்குமேல் வசிக்கிறார்கள். இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் இருபத்தைந்து லட்சம் தான். இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமன்றி உலகில் பரந்து வாழும் இனம் தமிழினம். தமிழ்மொழி உலக மொழியும்கூட. ஆனால் நாட்டுக்கு நாடு தமிழின் தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் மனப்பான்மை காரணமாக இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ற தமிழில் விஞ்ஞான அறிவு வளர்ச்சியடைய முடியாமலுள்ளது. தமிழ்நாட்டில் பிரசுரிக்கப்படும் தமிழ் விஞ்ஞான நூல்களையோ, விஞ்ஞானக் கலைச்சொல் அகராதிகளையோ ஈழநாட்டில் உபயோகிக்க முடியாமலுள்ளது. இதேபோல் இங்கு உருவாக்கப்படும் தமிழ் விஞ்ஞான நூல்களையோ, விஞ்ஞானக் கலைச்சொல் அகராதியையோ தமிழ்நாட்டில் உபயோகிக்க முடியாமலுள்ளது. இதன்விளைவாக தமிழின விஞ்ஞான வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. ஆங்கிலமொழிபலநாடுகளிலும் சிறிது வேறுபட்டிருந்தபோதிலும் விஞ்ஞான அறிவியற் சொற்களை ஆக்குவதில் அவர்கள் வேறுபட்டதில்லை. விஞ்ஞான வளர்ச்சி ஆராய்ச்சிகளுக்குத் தக்கபடி தமிழிலும் புதிய சொற்கள் தோன்ற வேண்டும். அதில் ஒருமைப்பாடும் இருக்க வேண்டும், இடத்துக்கு இடமும் நாட்டுக்கு நாடும் இதில் வேறுபாடு இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் தமிழ் மொழி வளரும்.

தமிழ்நாட்டில் விஞ்ஞானக் கலைச்சொல்லாக்கத்தில் திருத்தம் செய்வதுபற்றி ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. தமிழின் வளர்ச்சியை முன்னிட்டு இக்குழுவுடன் இலங்கைக் கல்விமான்களும் அறிஞர்களும் தமிழில் விஞ்ஞானக் கலைச் சொல்லாக்கத்தில் ஒற்றுமை காண முயற்சி செய்ய வேண்டும். அரசாங்க உதவியுடனோ அரசாங்கம் மூலமோ இதைச் செய்ய முன்வரலாம்.

---

வட பகுதியில்

# பஸ்சேவை இன்னும் சீராகவில்லை!

## பிரயாணிகள் தொடர்ந்தும் கஷ்டப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திற்கு பல பஸ்கள் வந்த பொழுதிலும் பஸ் சேவையில் குறிப்பாக எதுவித சீர்திருத்தங்களும் நடைபெற்றுள்ளதாகவோ அல்லது பிரயாணிகள் குறைபாடுகள், கஷ்டங்கள் நிவர்த்தி செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பல பகுதிகளிலும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும் உத்தியோகத்தர்களும் தினம் கஷ்டப்படுகிறார்கள். பஸ்களைக் கிரமப்படி ஓடவிடாது நின்று நேரத்தை வீணாக்கும் திட்டம் இன்னும் தீரவில்லை எனப் பொதுமக்கள் புகார் கூறிவருகிறார்கள்.

ஜூன் மாதம் முதலாந் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட காரைநகர்-கிளிநொச்சி பஸ்சேவையினால் சமுதாயங்களுக்குப் பிரயாணம் செய்வோர் தினமும் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காலை 4 மணிக்கு ஆரம்பமாகும் இச்சேவை இரவு 8 மணிவரையும் நடைபெறுகிறது. இச்சேவைகளுக்கு பஸ் ஒதுக்கப்பட்டுள்ளதால் குடாநாட்டுக்குள் உள்ள கிராமப் பகுதிகளுக்குப் போதிய பஸ்கள் கிடைப்பதில்லையென புகார் கூறப்படுகிறது.

சங்கானையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு காலை எட்டு மணிக்கு நடைபெறும் சேவை கடந்த சில தினங்களாக நடைபெறவில்லை. இதனால் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்களும் வேலைத்தலங்களுக்கு செல்லும் உத்தியோகத்தர்களும் குறித்த நேரத்திற்குப் பள்ளிக்கூடங்களுக்கும் காரியாலயங்களுக்கும் செல்ல முடியவில்லை.

இன்று சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், ஆனைக்கோட்டை முதலிய இடங்களில் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்கள் பஸ் இல்லாததால் பள்ளிக்கூடம் செல்ல முடியவில்லை. இன்று காலை 8-15 மணிவரை பஸ் தரிக்கும் இடங்களிலும் சந்திகளிலும் பெருந்தொகையான பிரயாணிகள் காணப்பட்டனர். அவர்களை ஏற்றிச் செல்லாமலும்-பஸ் தரிக்கும் இடங்களில் பிரயாணிகளை மேலும் ஏற்ற முடியாத காரணத்தால் நிறுத்தாமலும் அவ்வழியால் செல்லும் பஸ்களைப் பார்த்து மாணவர் கூச்சலிட்டனர்.

வட்டுக்கோட்டைச் சந்திக்கும் சித்தங்கேணிச் சந்திக்குமிடையேயுள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்கு இரண்டு பாதைகளில் மட்டுமே பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. இவை இரண்டும் சீரானமுறையில் சேவையில் இருப்பதில்லை என்றும் காலை நேரங்களில் உத்தியோகத்தர்களும் பாடசாலை மாணவர்களும் பலமணிநேரம் பஸ்களுக்காகக் காத்திருக்கவேண்டியுள்ளதாகவும் புகார் கூறப்படுகிறது. இன்று குறிப்பிட்ட இரண்டு பாதைகளிலும் கந்தோர் நேரத்துக்கு வரும் பஸ்கள் சேவையிலிருக்காததால் மாவடிச் சந்தியில் சுமார் 75 பிரயாணிகள் 2 மணித்தியாலங்கள் காலைக்குக் பஸ்களுக்குக் காத்து நிற்கவேண்டி ஏற்பட்டதாம். இதுபோல மற்றப் பகுதிகளிலும் இன்னும் பஸ்சேவை சீரடையவில்லையெனப் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது.

---

## 'நிரந்தர வேலை வழங்குக'

### எம். பி. யிடம் கோரிக்கை

காங்கேசன்துறை, திங்.

தமிழ்க்காங்கிரஸின் காங்கேசன்துறை கிளையைச் சேர்ந்த திரு. க. சுந்தரமூர்த்தியின் தலைமையில் இன்று ஒரு கோஷ்டி உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தைப் பேட்டி கண்டு கீழ்வரும் பிரேரணைகளைச் சமர்ப்பித்தது.

கடந்த இரண்டு வருடமாக சிமெந்துத் தொழிற்சாலை விவசாயிகளிடம் இருந்து சுவீகரித்த காணிச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு வழங்கவில்லை. அதை உடனடியாக வழங்க வேண்டும்.

கீரிமலையிலுள்ள காணிகளில் தற்பொழுது விவசாயம் செய்ய இயலாமல் மக்கள் தவிக்கின்றனர். ஆகையால் அவர்களுக்கு சிமெந்துதொழிற்சாலையில் உடனடியாக வேலை கொடுக்கவேண்டும், தற்பொழுது காணி வழங்கிய சிலருக்கு நிரந்தரமற்ற தொழில் வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு நிரந்தர வேலை வழங்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவிடம் சமர்ப்பித்து பேச்சுவார்த்தை மூலம் உடன் தீர்வுகாண்பதாக திரு. சிவசிதம்பரம் தூதுகோஷ்டியினருக்கு வாக்குறுதி அளித்தார்.

---

## கூட்டுறவுச் சங்கங்களின் சேவை

சாவகச்சேரி, திங்கள்

"லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கருதி கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கக்கூடாது. பொதுமக்களின் குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தி ஊக்குவிக்கவேண்டியது கூட்டுறவுச் சங்கங்களின் கடமையாகும்." என்று பரந்தன் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மு. சின்னத்தம்பி பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நான்காவது வருடாந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். விழாவிற்கு திரு. வை. வல்லிபுரம் தலைமை வகித்தார்.

புதுவருட நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

## பரிசளிப்பு விழா

பருத்தித்துறை, திங்கள்

அல்வாய் தெற்கு இந்துதமிழ்க்கலவன் பாடசாலை பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும் இவ்வைபவத்தில் மூன்றாம் வித்தியாதிகாரி திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ. வே. ஜீவநாயகம், நாவற்குளி மகாவித்தியாலய அதிபர் திரு. ஆர். கந்தையா, ஆசிரியர்கள் திரு. ஜி. எம். ஆழ்வாப்பிள்ளை, கே. கந்தவனம் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர். பரிசளிப்புகளின் முடிவில் பாடசாலை மாணவர்களது பாட்டு, நடனம் முதலான இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

---

## சிரமதானம்

கோண்டாவில், ஞாயிறு

இணுவில் தெற்கு பரராசசேகரப்பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற உற்சவங்களின் போது உடுவில் கிராமசபைத் தலைவர் திரு க. முத்துலிங்கத்தின் ஆதரவுடன் திரு. கதிரவேலு தலைமையில் தொண்டர்கள் சிரமதான இயக்க மூலம் வீதிகளை துப்பரவு செய்தனர்.

---

## கல்லூரியின் பாதுகாவலர் பழைய மாணவரே

வெள்ளவத்தை, திங்கள்

பணவசதியின்மை காரணமாக இன்று ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் தங்களது மேற்படிப்பைத் தொடர முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையை நல்வழியில இட்டுச் செல்வது பழைய மாணவர் ஒவ்வொருவரின் கடமையாகும். கல்லூரியின்பாதுகாவலர் பழைய மாணவர்களாகிய நீங்களே" என்று புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக்கல்லூரி அதிபர் திரு. க. குமாரசாமி அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார். இக்கூட்டம் அண்மையில் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்றது. கிளைச் சங்கத் தலைவர் திரு. மு. சிவராஜசிங்கம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கொழும்புக்கிளையின் உத்தியோகத்தராகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. ஏ. ரங்கநாதன், உபதலைவர்: திரு கே. சண்முகலிங்கம், செயலாளர்: திரு. கே. பேரகநாதன், பொருளாளரும் உதவிச் செயலாளரும்: திரு. நா. இரத்தினசிங்கம். நாலுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

அபிலாஷைக்குரல்கள்

## விளையாட்டுமைதானம்

காரைநகருக்கு விளையாட்டு மைதானமாக காரைநகர் மேற்கு கருங்காலி முருகமூர்த்தி கோவிலுக்கண்மையில் உள்ள போசட்டி என்னும் வயல் பதினொரு பரப்பை காரைநகர் கிராமச்சங்கம்வாங்கத் தீர்மானித்துள்ளது. குறித்த இடம் குடிநீர்க்கிணறு, குளிநீர்க்கிணறுக்குக் கண்மையிலுள்ளது பெண்கள் ஸ்நானம் செய்வதற்குரிய அவசியம் வாய்ந்த இடம். குடிமனைகளும் மிக அண்மையிலுள்ளன.

இவ்விடம் காரைநகர் கிராம மக்களுக்கு மத்தியில் உள்ளதுமல்லாமல் மாரிகாலத்தில் வெள்ளமும் போக்குவரத்து வசதியுமற்றது.

இவ்விளையாட்டு நிலத்திற்கு அண்மையிலும், ஒப்பீடுதூரத்திலும், சுகாதாரத்திற்கு ஏற்றதும், போக்குவரவு வசதியுள்ளதுமான இரண்டு ஏக்கர் அரசாங்க நிலம் இருக்க மேற்படி நிலத்தை வாங்கவேண்டுமா? கிராமசபை ஆலோசனை செய்யுமா?

க. சிவகுருநாதரும், மற்றும் கிராமவாசிகள் பலரும்.

## மும்மொழித் திட்டம்

இலங்கையிலே ஏற்பட்டிருக்கும் மொழிப்பிரச்னை வேளையிலே ஆங்கிலாட்சிக்குப் படிப்பினையான ஒரு செயலை அயல் நாடாகிய இந்தியா செய்திருக்கின்றது. "ஈழநாடு" பத்திரிகை 'இந்தியாவிலே மும்மொழித் திட்டம்' என்றதலைப்பின் கீழ் தலையங்கம் எழுதியிருந்தது வரவேற்கத்தக்கதாகும். இலங்கையிலும் சிங்களம், தமிழ் ஆங்கிலம் என்ற மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற வேண்டும் என நிர்ணயித்தால் இந்த மொழிப்பிரச்னை வெகுவாகத் தீருமென்பதை இனியாவது இலங்கை அரசாங்கம் நினைக்குமா?

'ஓர் அன்பர்'
காரைநகர்.

---

## தீக்குளிப்பு

கல்முனை, திங்கள்

மட்டக்களப்பு கொத்துக்குளத்து கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 6-ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து பத்து நாட்களுக்கு சடங்குகள் நடைபெறுவதுடன் கிழக்கிலங்கையிலேயே உள்ள எந்த கண்ணகை அம்மன் கோயில் தீக்குளிப்பு வைபவம் 9-ம் திருவிழா வன்று நடைபெறும். அடுத்த நாள் குளித்திச் சடங்குடன் உற்சவம் முற்றுப்பெறும்.

---

## புராணபடனம்

கச்சாய், திங்கள்

நுணுவில் வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை சார்பில் 64 திருவிளையாடல் புராண உபன்யாசம் திரு. செ. இளையதம்பி தலைமையில் திரு. க. வேலுப்பிள்ளை அவர்களால் சித்திராபூரணையன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

விசேஷ ஆராதனை கூட்டுப்பிரார்த்தனை, புராண சொற்பொழிவு ஆகியவைபிரதி வியாழக்கிழமைகளிலும் நடாத்தப்படுகின்றது.

---

## புதிய முத்திரைகள்

கொழும்பு, திங்கள்

ஐக்கியநாடுகளின் சின்னங்களுடனா இரண்டு பிரிவில் மூன்றுசத முத்திரைகளும் ஐம்பதுசத முத்திரைகளும் ஜூன் மாதம் 26-ம் திகதி வெளியிடப்படும் எனத் தெரியவருகிறது. அனகாரிக தர்மபாலாவின் உருவத்துடன் ஐந்து சத தபால் அட்டை ஒன்றும் அடுத்தவாரத்தில் அரசாங்கத்தினால் வெளியிடப்படவிருக்கிறது. புதிய தபாலட்டைகள் ஜூன் மாதம் 14-ந் திகதி வெளியிடப்படும்.

# "இந்தியாவை பாதுகாக்க நிரந்தர ஏற்பாடுகள்

## எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு எவ்விதத்திலும் தீர்வுகாணவேண்டும்

### ராஜிய உள்துறை மந்திரிகள் மகாநாட்டில் பிரதமர் சாஸ்திரி விளக்கம்

புதுடில்லி, ஜூன் 7

"கட்ச் பிரச்னை முதலில் தீர்க்கப்பட வேண்டும். அதன் பின்னரே பாகிஸ்தானுடனுள்ள மற்றைய பிரச்னைகளை நாம் ஆராயமுடியும். பாகிஸ்தானின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் எம்மை எச்சரிக்கையாக இருக்கும்படி தூண்டுகின்றன. பெரிய அளவிலான யுத்தம் ஒன்றைத் தோற்றுவிக்க பாகிஸ்தானும் சீனாவும் விரும்புகின்றன. அந்த நிலைமையை சமாளிக்கத் தயாராக இருக்கின்றோம். இதற்காகவே நாம் இந்தியாவைப் பாதுகாக்கும் நிரந்தர ஒழுங்குகளைச் செய்துள்ளோம்" என்று இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று புதுடில்லியில் ஆரம்பமான ராஜிய உள்துறை மந்திரிகள் மகாநாட்டில் பேசுகையில் கூறினார். இம் மகாநாடு இன்று தொடர்ந்து நடைபெற்றது.

ராஜிய உள்துறை மந்திரிகள் மகாநாட்டில் இந்தியாவை எதிர்நோக்கியுள்ள வெளி ஆபத்துகள் குறித்து ஆராயப்பட்டதுடன், எல்லைகளைப் பாதுகாக்கவும் எந்த விதத் தாக்குதலைச் சமாளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

**அபாயம் நீடிக்கிறது**

சீன, பாகிஸ்தான் அபாயம் தொடர்ந்து இருந்துவருகிறது. எல்லைகளில் புதிய நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதில் பாகிஸ்தான் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் பிரதமர் கூறினார்.

சமாதான வழிமூலமோ அல்லது எதிர்த்தாக்குதல் மூலமோ இந்தப் பிரச்னைகளுக்கு நாம் எப்படியும் தீர்வு காணவேண்டும். இது இப்பொழுது உறுதியாகிவிட்டது என்றும் அவர் சொன்னார்.

**நாடு பிளவுபடாது**

இந்தியாவின் பாதுகாப்புக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்பட்டால் நாடு ஒன்றுபட்டு நிற்கும் என்பது எனது நம்பிக்கை. இதனை மக்களுக்குத் தெளிவாக உணர்த்தவேண்டும்" என்றும் பிரதமர் தெரிவித்தார்.

---

## "ஆக்கிரமிப்புகளை சகிக்கமாட்டோம்

### யுத்தம் இந்தியாவின் நோக்கமல்ல"

புதுடில்லி, ஜூன் 7

நேற்று இங்கு நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் பிரதமர் திரு. சாஸ்திரி பேசுகையில் இந்தியா என்றுமே யுத்தத்தை விரும்பியதில்லை என்றும் அப்படியான நோக்கமும் இந்தியாவுக்குக் கிடையாதென்றும் கூறினார்.

இந்தியா சமாதான வழிகளையே கடைப்பிடிக்கிறது. ஆனால் எந்த நாட்டினதும் ஆக்கிரமிப்புக்கோ அல்லது தாக்குதல்களுக்கோ இந்தியா அகப்படுமானால் சரியான பதிலடி கொடுப்போம் என்றும் பிரதமர் சாஸ்திரி எச்சரிக்கை விடுத்தார்.

**ரஷ்ய-அமெரிக்க உறவுகள்**

ரஷ்ய-அமெரிக்க உறவுகள் குறித்துப் பிரதமர் குறிப்பிடுகையில் இவ்விரு நாடுகளுக்கிடையேயான தகராறுகள் தீர்ந்து ஒற்றுமையாகக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன என்றும் ஆனால் வியட்னாம் நெருக்கடி இந்த உறவுகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதென்றும் தெரிவித்தார்.

**சீன-ரஷ்ய வேறுபாடுகள்**

சீன-ரஷ்ய உறவுகள் விருத்திபெறும் என்பதில் நம்பிக்கையில்லை. சீனாவை ரஷ்யா இப்பொழுது சிறிதும் ஆதரிப்பதில்லை. வேறுபாடுகள்தான் அதிகரிக்கின்றன. ஆபிரிக்க நாடுகளிலும் சீனா தனது செல்வாக்கை இழந்துவருகிறதென்றும் பிரதமர் சாஸ்திரி கூறினார்.

ஆபிரிக்க நாடுகளில் சீனா தனது செல்வாக்கை இழந்து வருவதற்குக் காரணம் அந்த நாடுகள் சுதந்திரத்தையே பெரிதும் விரும்புகின்றன என்றும் பிரதமர் விளக்கினார்.

---

## விண்வெளி வீரர்களுக்கு பாப்பரசர் ஆசீர்வாதம்

### 15 லட்சம் மைல் யாத்திரை!

ஹௌஸ்டன், ஜூன் 7

விண்வெளியில் பறந்து கொண்டு பூமியை வலம்வரும் அமெரிக்க வானவெளிவீரர்களை பரிசுத்த பாப்பரசர் போல், ஆசீர்வதித்துள்ளார்.

"சாதனையைப் போற்றுகிறேன். சுகத்துடன் பூமிக்குத் திரும்ப வேண்டும்" என்று தமது ஆசிச்செய்தியில் பாப்பரசர் போல் தெரிவித்துள்ளார்.

விண்வெளிவீரர்கள் இன்று இரவு (இலங்கை நேரப்படி 10-40 க்கு, அட்லாண்டிக் கடலில் இறங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. விண்வெளிவீரர்கள் வானவெளியில்-பூமியைச்சுற்றி இதுவரை 15 லட்சம் மைல் யாத்திரை செய்துள்ளனர்.

---

## 'மாணவரின் உயர்வு ஆசிரியர் கையில் உள்ளது"

யாழ்ப்பாணம், வெள்ளி

"வட்டப்பகுதியில் வித்தியாபகுதியார் மாணவர்களின் நல்வளர்ச்சிக்காகச் செய்யவேண்டிய முக்கிய வேலைகளையெல்லாம் ஆசிரியசங்கங்கள் முன்னின்று செய்கின்றன. வலி-கிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கம் மாணவர் கல்வி வளர்ச்சிக்காக வித்தியாபகுதியாருக்கு முன்மாதிரியாகப் பல முன்னேற்றமான விஷயங்களில் முன்னின்றுழைப்பது யாவரும் அறிந்ததே. வலி-கிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பல்வேறு முயற்சிகள் மிகவும் பாராட்டக் கூடியனவாகும்" என்று சென்ற சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப் போட்டிக்குத் தலைமை தாங்கிய வட்டார வித்தியாதரிசி திரு. ஏ. அருணையா பரிசளிப்பு விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

23 பாடசாலைகளில் இருந்து 119 மாணவர்கள் மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்ப்பிரிவு ஆகிய பகுதிகளில் ஆண்களும், பெண்களும் தோற்றினர்.

பேச்சுப் போட்டிக் காரியதரிசி ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் "கோப்பாய்த் தொகுதியிலுள்ள பாடசாலைகள் அங்கமாக பங்குபற்றி பேச்சுப் போட்டியில் உற்சாகம் காட்டியமை மிகவும் வரவேற்கத்தக்கதாகும் என்றும் வருங்காலத்தில் மாணவர்களுடைய கல்வி முன்னேற்றத்திற்கு ஆசிரியர்களும் வித்தியாபகுதியாரும் பெற்றோரும் ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும் என்றும் கூறி நற்றில் யாவருக்கும் நன்றி கூறினார்.

**பரிசு பெற்றோர் விபரம்**

**மேற்பிரிவு ஆண்கள்**

ம. மகேசுவரன்— எம். எம். பாடசாலை ஆவரங்கால், க. சின்னத்துரையன்— எம். எம். பாடசாலை ஆவரங்கால், தி. விஸ்வரத்தினம்— அமெரிக்கமிஷன் பாடசாலை வளலாய்,

**மேற்பிரிவு பெண்கள்**

க. சந்திரமணி-சைவத்தமிழ் வித்தியாசாலை உரும்பராய், க. ஸ்ரீகாந்தராணி — சரஸ்வதிவித்தியாசாலை அச்சுவேலி, செ. சிவபாக்கியம்— சரவணபவானந்த வித்தியாசாலை கோப்பாய்

**மத்தியபிரிவு ஆண்கள்**

க. சயாகராசா— சரஸ்வதி வித்தியாசாலை அச்சுவேலி, பொ. டோமினிக்— றோமன்கத்தோலிக்க பாடசாலை உரும்பராய், வெ. மகாதேவா— எம். எம். பாடசாலை ஆவரங்கால்;

**மத்தியபிரிவு பெண்கள்**

க. ஜெயலட்சுமி— கந்தவேள் வித்தியாசாலை கோப்பாய், யோ. தங்கராணி — றோமன் கத்தோலிக்க பாடசாலை உரும்பராய், வ. அரசமணி—றோமன் கத்தோலிக்க பாடசாலை உரும்பராய்,

**கீழ்ப்பிரிவு ஆண்கள்**

செ அன்ரன் அரியதுரை-றோமன் கத்தோலிக்க பாடசாலை, வசாவிளான், க. இரகுநாதன்... சந்திரோதய வித்தியாசாலை உரும்பராய், வெ. அமிர்தலிங்கம்— சீ. சீ. பாடசாலை, நீர்வேலி

**கீழ்ப்பிரிவு பெண்கள்**

தி. றீற்று யோகரத்தினம்-றோமன் கத்தோலிக்க பாடசாலை, வசாவிளான், க. சரோஜினிதேவி—சைவத்தமிழ் வித்தியாசாலை, உரும்பராய், ச. ஜெயவதனு— சீ. சீ. பாடசாலை, இருபாலை.

**அதிக புள்ளிகள் பெற்ற பாடசாலை**

றோமன் கத்தோலிக்க பாடசாலை, வசாவிளான். எம். எம். பாடசாலை, ஆவரங்கால். சைவத்தமிழ் வித்தியாசாலை, உரும்பராய். சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி.

---

## யுத்தத்தை ஒழிப்பதில் எம்முடன் கூட்டுசேருக

### கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு அதிபர் ஜோன்ஸன் அழைப்பு

வாஷிங்டன், ஜூன் 7

யுத்தத்தைப் பூண்டோடு ஒழிப்பதில் அமெரிக்காவுடன் சேர்ந்து ஒத்துழைக்குமாறு அமெரிக்க அதிபர் திரு லிண்டன் ஜோன்ஸன் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சமாதானமே அமெரிக்காவின் இலட்சியமாகும். ஆனால் ஆக்கிரமிப்பு வேலைகளுக்கு அமெரிக்கா அடிபணியாது. சமாதானம்மூலமே உலகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் அமெரிக்காவுடன் ஒத்துழைக்குமாறு நான் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு அழைப்பு விடுக்கின்றேன்" என்றும் அதிபர் ஜோன்ஸன் கூறினார்.

"சமாதானக் கதவுகள் இன்னும் திறந்து கொண்டே இருக்கின்றன: அந்தக் கதவுகள் வழியாகச் சென்று எமது பிரச்னைகளுக்குத் தீர்வு காண்போம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

வாஷிங்டனிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் நேற்று உரைநிகழ்த்துகையில்தான் அதிபர் ஜோன்ஸன் மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

---

## சூ பேச்சு: கென்யா கண்டனம்

நைரோபி, ஜூன் 7

ஆபிரிக்க நாடுகள் புரட்சியை ஆதரிக்கின்றன என்று சீனப்பிரதமர் சூ-என்-லாய் கூறியதை கென்யா வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

உள்நாட்டிலோ அல்லது வெளியிடத்திலோ புரட்சி நடைபெறுவதை கென்யா சிறிதும் ஆதரிக்கவில்லை என்று நைரோபியில் கென்யா அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

## கார்ட்டூம் மர்மம்

கார்ட்டூம், ஜூன் 7

சூடான் தலைநகரமான கார்ட்டூமிலுள்ள விமானத்தளம் நேற்று இரண்டாவது நாளாக மூடப்பட்டிருந்தது. இந்நகரத்துடனான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.

---

## பாரதி கல்லூரியில் வள்ளுவர்விழா

கொக்குவில், மே 4

திருவள்ளுவர் தினத்தை ஜூன் மாதம் 11-ம் திகதி சிறப்பாக கொண்டாட கொக்குவில் பாரதி கல்லூரி மாணவ மன்றத்தினர் ஒழுங்கு ஏற்பாடுகள் செய்து வருகினார்கள், மன்ற போஷகர் திரு. எஸ் ஜெகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் கோலாட்டம் நடனம்போன்ற நிகழ்ச்சிகளும் முத்தமிழ்போட்டியொன்றும் நடைபெறும்.

---

## ஆசிய-ஆபிரிக்க உச்சிமகாநாடு

லண்டன், ஜூன் 7

இரண்டாவது ஆசிய ஆபிரிக்க உச்சி மகாநாடு இம்மாதம் 29-ம் திகதி அல்ஜியர்சில் நடைபெறவிருக்கிறது.

---

## சோவியத்-பாக் கலாச்சார ஒப்பந்தம்

கராச்சி, ஜூன் 7

சோவியத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான கலாச்சார ஒப்பந்தமொன்று இன்று கராச்சியில் கைச்சாத்தானது.

---

## ஒருவர் பலி

மதுரை, ஜூன் 7

மதுரையில் பெற்றோல் கிடங்கு தீப்பற்றி எரிந்ததால் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர். மற்றுமொருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது.

---

## சுவர்ண்சிங்

நைரோபி, ஜூன் 7

இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் இன்று கென்யா தலைநகர் நைரோபி வந்துசேர்ந்தார். இங்கிருந்து அவர் கெய்ரோ செல்வார்.

---

## 46,500

சைகோன், ஜூன் 7

தென்வியட்னாமிலுள்ள அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை 76,000மாக உயர்த்தப்படவிருக்கிறது. தற்பொழுது தென்வியட்னாமில் 46,500 அமெரிக்கத் துருப்புகள் இருக்கின்றன.

---

## ஜெனரல் டெய்லர்

வாஷிங்டன், ஜூன் 7

தென்வியட்னாமிலுள்ள அமெரிக்கத் தூதர் ஜெனரல் டெய்லர் இன்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார். ஆலோசனைகள் நடத்தும்பொருட்டு அவர் இங்கு வந்திருக்கிறார்.

இது விஞ்ஞானம்

# 'எக்ஸ்-ரே' எப்படி பிறந்தது?

— த. இந்திரலிங்கம் —

இந்த நூதனமான கதிரொளியைக் கண்டுபிடித்தவர் 'பியூசிக்' என்னும் இடத்தில் 1845-ம் ஆண்டு பிறந்த டாக்டர் கொன்ராட் வில்லியம் ராண்ட்ஜன் என்பவராவர். இவர் உட்ரெக்ட் என்னும் நகரில் கல்விபெற்றுப் பின் உட்ஸ்பேர்க் என்னும் நகரில் உள்ள சர்வகலாசாலையில் இரசாயன ஆசிரியராக வேலை பார்த்தார். பின்பு 1899 ஆம் வருடம் 'மியூனிச்' சர்வகலாசாலையில் கடமையாற்றிய ராண்ட்ஜன், மின் அறிவும், நுண்ணிய அறிவும் நிரம்பியவர். அவர் தமது 50 வது வயதில் ஒருநாள் தனது அறையை இருட்டாக்கிக் கொண்டு, சாளரம் முதலியவற்றைச் சாத்திக்கொண்டு 'குருக்ஸ்' குழாய் என்ற கருவி ஒன்றை ஆராய்ச்சி செய்துவந்தார். அப்போது அவருக்கு எதிரிலுள்ள புகைப் படக் காகிதத்தில் மின்னல்போன்ற பளிச்சென்ற வெளிச்சம் உண்டானது. தமது ஆராய்ச்சியில் ஏதோ தவறுண்டாகி விட்டது என எண்ணிய அவர் தனது அன்றைய ஆராய்ச்சியை நிறுத்திவிட்டார்.

மறுநாள் மீண்டும் அறையிருட்டில் தமது ஆராய்ச்சியைத் தொடங்கினர். அன்றும் முன்னாளில் தோன்றியதுபோலவே அந்நூதன ஒளி தோன்றியது. உடனே அவர் "இந்தக் குருக்ஸ் குழாயில் ஏதோவிசேஷத் தன்மை இருக்கவேண்டும்" என்ற முடிவுக்கு வந்தார். பிறகு சிறிதுநேரஞ் சிந்தனை செய்த "குருக்ஸ் குழாயிலிருந்து வெளிவரும் அவ்வொளி பொருட்களின் மூலமாக ஊடுருவுந் தன்மையுடையது. இதன் உதவியால் பொருள்களின் படம் எடுக்கலாம் என்று தனக்குள் கூறிக்கொண்டார். இதை அவர் பரிசோதிக்கமுயன்று சில தகடுகளை ஒரு பெட்டியிலிட்டுப்போட்டு அதன்மேல் குருக்ஸ் குழாயின் ஒளியைச் செலுத்திப் படம் பிடித்தார். அப்படத்தில் பெட்டியின் உருவம் நிழல்போலவும் பெட்டியில் வைத்திருந்த ஆணிகள், தகடுகள் முதலியவை மிகத்தெளிவாகவும் இருந்தன. இவ்வற்புதத்தைக் கண்ட அவர் மனம் அடைந்த மகிழ்ச்சியை அளவிட முடியாது. இவ்வாராய்ச்சியோடு அவர் நின்றுவிடவில்லை. "குருக்ஸ் குழாயின் ஒளி மனித உடலூடுருவும் பாயாதா?" என எண்ணினர். உடனே ஒருகுருக்ஸ்குழாயின் ஒளியைத்தன் கையிற்படச்செய்து அதைப் படம் பிடித்தார். அப்படத்தில் கைத்தசை நிழல்போலவும், எலும்புகள் தெளிவாகக் கருநிறத்திலும் பதிந்திருந்தன. இவ்வற்புதங்களைக் கண்டறிந்த நாள் 1895-ம் ஆண்டு நவம்பர்மாதம் 8-ந் தேதியாகும். பின்பு அவர் ஒருமணித்தியாலம் அந்த நூதன ஒளியைக் கொண்டு படம்பிடிப்பது பற்றியும் தன்னுடைய ஆராய்ச்சிகள் பற்றிய கட்டுரைகளையும் எழுதிப் பத்திரிகையில் வெளியிட்டார். மூன்று தினங்களுக்குள் அந்த ஆராய்ச்சி அமெரிக்கா ஐரோப்பா முதலிய நாடுகளுக்குப் பரவ எல்லா விஞ்ஞானிகளும் உண்மையை உணர்ந்து அந்த நூதன ஒளியைத் தம் ஆராய்ச்சிகளிற் பயன்படுத்தினர்கள். இந்த ஒளி அதைக் கண்டுபிடித்தவர் பெயரால் ராண்ட்ஜன்—ரே என வழங்கப்பட்டது. அந்த ஒளி வெளிப்பட்ட என்ன என்ன காரணம் என்று விளங்காமையால், அது எக்ஸ்ரே என அழைக்கப்பட்டது. ஏனெனில் கணிதத்தில் நாம் 'X' என்ற எழுத்தை என்ன எனத் தெரியாததற்கு உபயோகிக்கிறோம் அல்லவா!

வரக்கர் கச்சேரியும் சதுர்க் கச்சேரியும் பரதநாட்டியமும் நடைபெறும்.



## மாணவர் மலர்



நமது (நாட்டு) பிரச்சினை

# பம்பாய் வெங்காயத்தை உற்பத்திசெய்வதுஎப்படி?

நமது எதிர்காலமும் நாட்டின் எதிர்காலமும்நல்லமுறையில் வர வேண்டுமாயின்வெளிநாட்டில் உற்பத்தி செய்து இங்கு இறக்குமதி செய்யப்படும் வெங்காயம் போன்ற பொருட்களைக் கையால் கூடத் தொடடுப்பாராது உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு அளிக்க வேண்டும். நாம் எமது வீடுகளில் சிறிய அளவிலேனும் செய்து இந்த உற்பத்தியைக் கூட்டிப் பண்டைக்காலத்தில் நம் நாட்டிலிருந்து கறுவா கராம்பு ஏற்றுமதி செய்யப்பட்டது போன்று பம்பாய் வெங்காயத்தையும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியளவிற்கு முன் வர வேண்டும் அனைவரும் ஒத்துழைத்தால் 5 வருடத்திற்குள்

பொ. கனகநாயகம்

இலங்கையின் ஜனத்தொகைக்குக் கூடுதலான பம்பாய் வெங்காயத்தை உற்பத்திசெய்வதுடன் இதை நாம் வேற்று நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

பம்பாய் வெங்காயச் செய்கைபற்றி ஆராய்வோம்:

**நாற்றுமேடை:**

1. மேடை போடப்படும் இடத்திற்கு அண்மையில் எருக்குவியல் அல்லது புல், குப்பைகளம் போன்றவை இருக்கக் கூடாது.
2. தண்ணீர் தேங்கி அல்லது ஓடாமல் இருக்கக்கூடிய நிலத்தைத்தவிர்க்க வேண்டும்
3. ஒரு ஔன்ஸ் விதைக்கு 3×20 சதுர அடி நிலம் தேவை
4. நாற்று மேடைக்குத்தயார் செய்த இடத்தை 3 அல்லது 4 தரம் உழவேண்டும்,
5. உழவு செய்த நிலத்தில் அல்லது கொத்திய நிலத்தில் உள்ள தரையை அரை அடி உயரத்திற்கு உயர்த்தி மேடை வடிவமாக்க வேண்டும்.
6. மேடையில் குப்பை போட்டு நன்கு எரிக்கவேண்டும். மேடையில் ஒரு உருளைக்கிழங்கைப் புதைத்து அது வேகும் வரை சுடல் வேண்டும்.
7. சுட்ட மேடையில் நன்கு உக்கிய கூட்டெரு அல்லது மாட்டெரு போட்டு நன்கு கொத்திப் புரட்டி மண்ணுடன் நன்கு உலரக்கூடிய அளவுக்கு சிறிதாக்க வேண்டும்.

இதன் பின்னர் மேடையின் சூடு ஆறியபின் (2, 3 தினங்களின் பின்) விதையை ஐதாகத் தூவிவிட வேண்டும். போடப்பட்ட விதையை அரை அங்குல ஆழத்தில் மண்ணால் மூடி விட வேண்டும், அன்றேல் உக்கிய சாணத்தாலும் விதைகளை மூடி விடலாம் விதையை மூடியபின் ஓலைகளிலோ அல்லது வைக்கோலினலோ மூடிவிடவேண்டும் பின் மேடைமீது தண்ணீரைச் சிறு தேவைக்கு ஏற்ப பூவாளியால் ஊற்ற வேண்டும்.

விதை 5—7 நாட்களுள் முளைக்கத் தொடங்கும். அப்பொழுது மூடியிருக்கும் கிடுகு அல்லது வைக்கோலை அகற்றி விடவேண்டும். மேடைக்குத் தினந்தோறும் பூவாளியால் நீரூற்ற வேண்டும். மேடையில் கன்றுகள் முளைத்ததும் உஷ்ணநிலைக்கேற்றபடி காலை 10 மணி தொட்டக்கம் மாலை மூன்றரை மணி வரைக்கும் மேடைமீது நிழல்போடவேண்டும். நிழல் போடுவதால் சிறு கன்றுகள் வாடாமல் வதங்காமல் வளரக் கூடியதாயிருக்கும். நிழல் போடாது விட்டால் தண்டுகள் கருகும் போது வெய்யிலா, நோயா காரணம் என்பதை அறியமுடியாதிருக்கும். நிழலிருந்தும் தண்டுகள் கருகினால் நோயென உணர்ந்து அதற்கு மருந்து தெளித்து அதைத் தடுக்கலாம்.

விதை முளைத்த நாள்தொடக்கம் மேடையின் உள்ள கன்றுகளுக்கு "டியல்ரின்" (Dieldrin) ஒரு அவுன்சிற்கு இரண்டு கலன் நீர் விட்டுக் கலந்து வாரத்திற்கொருதடவை மேடைக்கு தெளிக்க வேண்டும்.

மழை பெய்யும் போது நாம் மருந்துதெளித்தால்எமக்குஎவ்வித பயனுமில்லை. தொடர்ச்சியாக மழை வரும் அறிகுறி தோன்றினால் காலையில் அல்லது மாலையில் மருந்துதெளிக்கலாம் மேடையில் களை வளரவிடாது பிடுங்கி விடவேண்டும். மேடை போடப்பட்ட இடத்தில் காளான், எலி நத்தை போன்றவை வராமல் பாதுகாத்தல் வேண்டும். சில வேளைகளில் நத்தை, எறும்பு போன்றவைகளால் இளம்பயிருக்கு ஆபத்து ஏற்படவும்கூடும்.

(தொடரும்)

தொடர் நவீனம்

# ஆகாயக் கோட்டை

— க. கனகலிங்கம் —

நட்டநிசி. எங்கும் பயங்கர அமைதி நிலவியது. தூரத்தே ஆந்தையொன்று அலறிக் கொண்டிருந்தது. அமைதியை கிழித்துக்கொண்டு அரண்மனை வாயிலில் ஓர் வண்டி நுழைவதையும் அவ்வண்டியைத் தொடர்ந்து ஒற்றைக்கால் கொண்டியும் அரண்மனை வாயிலில் நுழைவதையும், வண்டியிலிருந்து பயங்கர விலங்குகளும், சங்கிலியில் பிணைக்கப்பட்ட பல இளஞ் சிறுர்களும் இறங்குவதையும் அவர்கள் எல்லோரும் எலும்புந் தோலுமாயிருப்பதை தனபால் அரண்மனையின் பொருத்தப்பட்ட தீவட்டிகளின் வெளிச்சத்தில் கண்டு கொண்டான். பொழுது புலர்ந்துகொண்டிருந்தது ஆனல் தனபாலின் அறைமாத்திரம் இருளில் மூழ்கியிருந்தது. ஒற்றைக்கால் கொண்டி கதவைத் திறந்து உணவை வைத்து விட்டு மீண்டும் வெளியேறிப் போய்விட்டான். அப்பொழுதுதான் பொழுது புலர்ந்து விட்டதை தனபால் உணர்ந்தான். உணவு உண்டு முடிந்த தனபால் இருள் நிறைந்த அறையைச் சோதனை செய்யவேண்டுமென்ற உணர்வு அவன் உள்ளத்தை ஊக்குவித்தது. மறுகணமே சோதனையை ஆரம்பித்துவிட்டான். கைகளால் அறையைத் தடவிக்கொண்டுவந்த தனபால் அறையின் ஓர் மூலையில் ஒரு உருவம் இருப்பதைக் கண்டுகொண்டான். மறு கணம் பீதிகொண்டவனாய் மூர்ச்சித்து தரையில் சாய்ந்தான். அவனது கை அவ்வுருவத்தின் மேல் விழும்போது பட்டதோ என்னவோ மறுகணம் உருவம் பயங்கரச் சிரிப்புச்செய்து பேசத் தொடங்கியது" அப்பா மனிதப் புல்லே எங்கே செல்கிறாய்? உடனே திரும்பிச்செல் என்று கட்டளையிட்டது.

மயக்கம் தீர்ந்த தனபால் கதவின் திறப்புத் துவாரத்திற்கு ஊடாக வரும் சூரிய ஒளியின் துணையால் அவ்வுருவம் மனித உருவமல்ல ஓர் மனிதப் பொம்மை என்பதைக் கண்டுகொண்டான். ஆச்சரியமும் பயமும் மனதில்குடிகொள்ள பொம்மையை சோதிக்க ஆரம்பித்தான், என்ன ஆச்சரியம். தனபால் பொம்மையின் தலையை அசைத்ததும் டமார் என்ற சத்தத்துடன் பொம்மை தரையில் சாய்ந்தது. பொம்மை இருந்த இடத்தில் ஒரு மனிதன் செல்லக்கூடிய துவாரம் ஒன்று தரைமட்டத்திலிருந்து பாதாளம் நோக்கிச் செல்வதைக் கண்டுகொண்டான். பாதாளத்திற்கூடாக சிறிது வெளிச்சம் தெரிந்தது. அப்பாதாளத்திற் கூடாகச் சென்று தப்பித்துவிடலாம் என் று தனபால் எண்ணினான். அசுமாத்தம் இல்லாமல் தனபால் துவாரத்தின் வழியாக இறங்குவதற்கும் ஒற்றைக்கால் கொண்டி கதவைத் திறப்பதற்கும் சரியாக இருந்தது!

(தொடரும்)

## ஞாபகத்துக்கு ஒரு பரீட்சை

1. குலைக்காத நாய் எது?
2. வாலில்லாத பூனை எது?
3. பகப்பாலில் உள்ள அமிலம் எது?
4. சீமெந்தைக் கண்டுபிடித்தவர் யார்?
5. வாகனங்கள் வலதுபுறமாகச் செல்கிற நாடு எது?
6. இந்தியாவின் முதல்பெண் கவர்னர் யார்?
7. ஜப்பான் மன்னர் யார்?
8. தென்னாபிரிக்க கிரிக்கெட் கப்டன் யார்?
9. தமிழில் தட்டச்சு போட்டை உருவாக்கியவர்யார்?
10. ஹெலிகோப்டரைக் கண்டு பிடித்தவர் யார்?

### விடைகள்

1. "பெசென்ஜி" என்கிற நாய் குலைப்பதில்லை.
2. 'மங்க்ஸ்' ஜாதி பூனை.
3. லாட்டிக் (Latic) அமிலம்.
4. ஜோசெப் அஸ்ப்டின் (Joseph Aspdin).
5. ஸ்வீடன்;
6. சரோஜினி நாயுடு.
7. ஹிரோ ஹிட்டோ.
8. ஜி. எல். கோடாம்.
9. கே. பி. முத்தையா.
10. ரோலடி பெஸ்கரா.

தொகுப்பு:-

நெல்லை க. பேரன்.

# வள்ளுவர் வகுத்த அரசியல்

— செல்வி நா. பரமேஸ்வரி —

தமிழுக்கும் தமிழனுக்கும் பெருமையைத் தேடித்தந்த எம் வள்ளுவர் பெருமையை நாம் அனைவரும் நினைவு கூர வேண்டும்,

வள்ளுவர் வகுத்த அரசியலை நாம் சிறிது நோக்குவோம்; அரசியலில் அறத்தைப் புகுத்த விரும்பாத மனிதாபிமானமற்றவர்கள் அரசியலுக்கு அருகதை அற்றவர்கள் என்பதை வள்ளுவர் முடிவு கட்டினர். மாண்புள்ள அரசியலை உருவாக்க நினைத்த வள்ளுவர் அக்கிரமக்காரர் நிறைந்துள்ள ஆட்சியை எச்சரிக்கை செய்யவிரும்பி அல்லற் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செலவத்தைத் தேய்க்கும் படை" என்று வலியுறுத்தினர்.

மக்களின் கண்ணீர் மன்னனின் காப்போரின் செல்வத்தைத் தேய்க்கும் படையாக மாறிவிடும். ஆகவே மக்களின் இன்பத்திலே மனக்கம் கொண்டவர்களாக இருந்து ஆட்சிசெய்யவேண்டும். இப்படிப் பட்டவர்களே அரசை நடத்துவதற்குத் தகுதியுடையவர்கள் என்பது வள்ளுவர் கருத்து. அரசனிடம் பகைவரை எதிர்த்து நிற்கக்கூடிய படைப்பலம் இல்லாது இருக்கலாம். ஆனால் நீதி குன்றாத செங்கோலுடையவனாக இருத்தல் அவசியம்,

"குடிமக்களின் குரல் ஒலியே மாற்றானை வதைக்கும், விரட்டும் படையாக ரீங்காரஞ்செய்யும்" எனக் கூறுகின்றனர். அரசு நடத்துபவர் அறநெறி தவறாது எவரையும் எடுக்கும் மனப்பான்மையை அகற்றி நீதியின் பால் நின்று கருமமாற்ற முனையவேண்டும். அந்நிலை நீங்கின் அதிகார போதையின் அடிமைகளில் ஈடுபட்டால் அரசு நிலைக்காது.

பணமில்லை என்ற பல்லவி எங்கும் ஒலிக்க பணத்தைத் திரட்டி சும்பரவாழ்வு அதிகமுள்ளதாக நாடு இருப்பதை வள்ளுவர் ஆதரிக்கவில்லை. தேவைக்கு மிஞ்சிக் குவிந்து கிடப்பதைத் தேவையான இடத்திற்குக் கொண்டுசெல்வதே அரசினர் கடமை. இதற்கு திறமைவாய்ந்த திட்டங்களை வகுத்து உற்பத்தியைப் பெருக்கி மக்களுக்கு வாழ்வழி வகுத்த பின்னரே அரசுக்கு உதவுமாறு மக்களைக் கேட்க வேண்டும். இதையே "இயற்றலும் ஈட்டலும்காத்தலும்வகுத்தலும் வல்லது அரசு" என்று பொருளாதாரத்தை உயர்த்தும் வகையைக் கூறுகின்றார்.

வள்ளுவர் தமிழகத்தில் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்தவர். மதுரையை இருப்பிடமாகக்கொண்டு பாண்டியனிடம் அரசியல் பணியாற்றிவந்தார் அறிவும், ஆற்றல், அனுபவம் என்னும் முக்கனியைக்கொண்டு "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறளாம்" திருக்குறளை இவ்வுலகிற்கு ஈந்தார். மதங்களைப்பற்றா நீதி நூலாக உலகம் வரவேற்கும் நூல் இதுவேயாம்!

"வெள்ளி வியாழன் விளங்கிடவே வெண்திங்கள் போல் லனை நீக்கும் புறவிருளை—தெள்ளிய வள்ளுவரின் குறள் வெண்பா அகிலத்தோர் உள்ளிருள் நீக்கும் என" இத்தகைய மதிப்புத் பொதிந்தது இத்திருக்குறளாம்.

## விளம்பரம்

### தேவை

நவக்கிரி ப. நோ. கூட்டுறவுச்சங்க பண்டசாலைக்கு ஓர் மனேஜர் தேவை.

**தகைமைகள்**

சங்க எல்லைக்குள் வசிப்பவராயும் சிரேஷ்ட தராதரப்பத்திரம் பெற்றவராயும், கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராயும் இருத்தல் வேண்டும். பிணை ரொக்கம் 500/ ஆதனம் 1000/.

சம்பளம்: ரூபா 125/- (எல்லாம் உட்பட).

விண்ணப்பங்கள் 20-6-65-ம் திகதிக்குமுன் காரியதரிசி, நவக்கிரி ப. நோ. கூ. சங்கம், புத்தூர் என்று விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். 406

### ஊறணி அர்ச்: அந்தோனியார் திருநாள்

இவ்வருடம் ஆனிமாதம் 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வெஸ்பரும் சுற்றுப்பிரகாரமும், 14-ந் திகதி திங்கட்கிழமை பாடற்பூசையும் நடைபெறும். 405

சாவகச்சேரி, திங்கள்

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்கத்தினரின் ஆதரவில் திருஞானசம்பந்தர் சைவசமய பாடப்பரீட்சை இந்த வருடம் செப்டம்பர் மாதம் ஏழு இடங்களில் நடைபெறும் எனசங்கக்காரியதரிசி தெரிவித்தார்.

REGAL - JAFFNA
NOW SHOWING
Danny Kaye
in
THE MAN FROM
THE
DINERS' CLUB

## செவிடர், குருடர் பாடசாலையில் சட்டதினம்

யாழ்ப்பாணம், செவ்

கைதடி செவிடர் குருடர் பாடசாலையில் சென்ற வெள்ளிக் கிழமை சட்டதினம் கொண்டாடப்பட்டபோது சட்ட ஒழுங்கை விளக்கும் சிறு நாடகங்களும் பேச்சுக்களும் இடம் பெற்றன.

போட்டியில் 6-ம் வகுப்பினரால் காண்பிக்கப்பட்ட "வீதி ஒழுங்கு" பற்றிய செய்கை நாடகம் முதல் இடத்தையும் 6-ம் வகுப்பினரால் காண்பிக்கப்பட்ட "அவதானம்" இரண்டாம் இடத்தையும், 8-ம் வகுப்பினரால் காண்பிக்கப்பட்ட "குற்றவாளி" என்ற நாடகம் மூன்றும் இடத்தையும் பெற்று உரிய பரிசில்களைப் பெற்றன.

"உலக சமாதானம்" "மூறு பாதுகாப்பு" "விதிகளைக் கவனியுங்கள்" ஆகிய பொருபொதிந்த விளக்கச் சித்திரங்கள் மாணவர்களினால் வரையப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டன.

கட்புலன் இழந்த மாணவன் கா. விசயராசசிங்கம் "சட்டமும் காருபு" என்ற பொருள் பற்றிப் பேசினார்.

இறுதியில் நாம் சட்டத்திற்கு அமைந்து நடக்கவேண்டியதின் அவசியத்தையும் அதன் நன்மைகளையும் பற்றி அதிபர் மாணவர்களுக்கு எடுத்து விளக்கினார்.

வவனியா, மன்னார்

# மாவட்ட பாடசாலை விளையாட்டுப்போட்டி

## மாணவர்களின் சாதனைக்கு அரசாங்க அதிபர் பாராட்டு

வவனியா, திட்கள் என்று வவனியா அரசாங்க அதிபர் திரு. ஆர். எம். பி. சேனநாயக்கா வவனியா மாவட்டத்தின் ஆதரவில் நடைபெற்ற மத்திய மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டிகள், உடற்பயிற்சி போட்டிகள் ஆகியவற்றுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

"வெற்றியையும் தோல்வியையும் சமனாக மதிக்கவேண்டும். தோல்வி அடைபவர்கள் சோர்வு அடையக்கூடாது. அதுபோல வெற்றி பெறுபவர்கள் வீண்பெருமை கொள்ளக்கூடாது. இலங்கையில் மாவட்டக் கல்வியில் முன்னேற்றம் அடையாதிருந்தும் தேகப்பயிற்சித் துறையில் இன்று இலங்கையில் மற்றைய விளையாட்டு வீரர்களின் தரத்தை அடைந்திருப்பதையிட்டு உண்மையில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். வவனியாவில் நான் கண்ட இந்த விளையாட்டுப் போட்டிகளின் தரத்தை வேறு எங்கும் காண்டதில்லை"

வவனியா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்வருடப் போட்டிகள் மிகவும் சிறந்தனவாக இருந்தன. விளையாட்டுத் துறையில் சென்ற வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் அதிக சாதனைகள் முறியடிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. போட்டிகளை உடற்பயிற்சி வித்தியாதரிசி திரு வே. தங்கராசா ஒழுங்கு செய்திருந்தார்.

வவனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள் இப்போட்டிகளில் கலந்துகொண்டன.

### மாணவர்களுக்கு அதிபர் பாராட்டு

பின்தங்கிய பகுதிகளில் இருந்து வந்து இவ் விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொண்டு பல சாதனைகளை முறியடித்ததற்காக மாணவ மணிகளை அரசாங்க அதிபர் வெகுவாகப் பாராட்டினார். "நாட்டின் முன்னேற்றம் இளைஞர்கள் கையில்தான் தங்கியிருக்கிறது. அப்படியான இளைஞர்களைப் பண்படுத்த இப்படியான உடற்பயிற்சிப் போட்டிகள் மிகவும் உதவி புரிகின்றன" என்றும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

### போட்டி முடிவுகள்

கோலாகலமாக வவனியா தமிழ்மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளி சனிக்கிழமைகளில் நடைபெற்ற இப்போட்டிகளில் ஆண்கள் பிரிவில் எருக்கலம்பிட்டி மகாவித்தியாலயம் 58 புள்ளிகளைப் பெற்று முதலிடம் வகித்தது. சென் சேவியர் மகாவித்தியாலயம் 54 புள்ளிகளையும் மகாவித்தியாலயம் 49 புள்ளிகளையும் பெற்று முறையே இரண்டாம், மூன்றும் இடங்களைப் பிடித்தன.

பெண்கள் பிரிவில் வவனியா மகாவித்தியாலயம் 47 புள்ளிகளை எடுத்து முதலிடம்பெற்றது. காமினி சிங்கள மகாவித்தியாலயம் 33 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மடுக்கந்தை மகாவித்தியாலயம் 17 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி சேனநாயக்கா பரிசுகளை வழங்கினார்.


வெற்றி... 4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கும்பவித்தெரு)
விஜயா (மஹிய்க்கனை) | விஜிதா (வட்டன்) | தீவோலி (நுவரேலியா)
வெம்பிலி (கண்டி) | மொடேர்ன் (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30 6-30 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு


## வரி விளம்பரம்

### தேவை

கைத்தறி நெசவு தெரிந்த ஆண் தொழிலாளர் தேவை. குறைந்தது 3 வருட அனுபவம் வேண்டும். நற்சாட்சிப் பத்திரத்துடன் 15-6-65-முன் விண்ணப்பிக்கவும். அ. கணபதிப்பிள்ளை, நவ ஜீவன் ஸ்டோர்ஸ், வந்துராயன் மடச்சு, செம்பியன்பற்று. 358

தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணமிட்டு திற்கு விபரங்கள் அடங்கிய கற்றலோக் இறும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தா கைலாசபிள்ளையார்கோவிலடி யாழ்ப்பாணம்.

### சமூகசேவா சங்க புதிய உத்தியோகஸ்தர்

யாழ்ப்பாணம், செவ்

கொட்டடி சனசமூகசேவா இளைஞர் சங்கத்தின் உத்தியோகத்தர் தெரிவுக் கூட்டம் செல்வன் செ. ஸ்ரீபதி தலைமையில் சென்ற சனிக்கிழமை நடைபெற்றது. பின்வருவோர் புதிவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- செல்வன் நா. இராமச்சந்திரராசா, காரியதரிசி- செல்வன் க. செல்வநாயகம். பொருளாளர்- செல்வன் மு ஜெகதீசன், வாசிகசாலை மேற்பார்வையாளர்- செல்வன் செ. குஞ்சிதபாதம். பின்வருவோர் நிர்வாக குழுவினராக தெரிவு செய்யப்பட்டனர். வை. பூபாலசிங்கம், ந. குமரகுரு, சி. நடேஸ்வரன், சே. தில்லைநடராசா, அழ சின்னப்பன், க புஷ்பநாதன், த. தனபாலசிங்கம்.

தலைவர், காரியதரிசி ஆகியோர் கூட்டமுடிவில் தாம் சங்க நலனுக்கு தொண்டாற்றுவதாக உறுதி தெரிவித்தனர்.

### சட்டதின விழா

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் உதவித் தலைமையாசிரியர் திரு வே. தாமோதரம் தலைமையில் சட்டதினம் கொண்டாடப்பட்டது. அப்பொழுது உயர்தர வகுப்பு மாணவர்கள் சட்டமும் ஒழுங்கும், 'சட்டத்தின் ஆட்சியும் பரிபாலனச் சட்டமும்'. 'மனிதன் ஒரு சமூக மிருகம்" என்னும் விஷயங்கள் பற்றிப் பேசினர். திரு ச. இராமலிங்கம், திரு. ந. நடேசர், திரு க. சிவனத்துரை ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

### வானொலி நிகழ்ச்சிகள்

**செவ்வாய் 8-6-65**

**கொழும்பு**

(செய்திகள் காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 நேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 பட்டிப்பாட்டுகள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 சிறிலங்கா குறுக்கெழுத்துப்போட்டிகள், 7-00 வயலின், 7-30 மத்தாப்பு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம். 9-45 நாதஸ்வரம்

னர். யாழ்ப்பாண உடற்பயிற்சி வித்தியாதரிசி திரு சிவரத்தினம், திருமதி ஞானதாசன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

### சிங்கள வகுப்புக்கள்

காங்கேசன்துறை வீதி 330க் இலக்க கட்டிடத்தில் ஆசிரியர் சேனதிருக்காவலரால் நடாத்தப்பட்டு வந்த சிங்கள வகுப்புக்கள் காங்கேசன்துறை வீதி 278-ம் இலக்கத்திலுள்ள கணக்கியல் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. 362

### விண்ணப்பப் பத்திரம்

தாதிமார் பயிற்சி விண்ணப்பப்பத்திரம் பெறவிரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 30 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். க. பரமானந்தம், கணக்கியல் கல்லூரி, 278 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 381

### கல்வி

பி. ஏ: ஜி. ஏ. கியு: ஜீ. சீ. ஈ. உயர்தர, சாதாரணதரங்களுக்கு விஞ்ஞானம்: வர்த்தக வகுப்புசிங்களம்: அப்போதிக்கரிப்புகுழுக வகுப்பு மத்திய சமூக் விளைவு வகுப்பு: வேறு பல வகுப்புகளுக்கும், தனிப்பட்ட வகுப்புகளுக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

யாழ்- டியூட்டோறியல் கல்லூரி; கைலாசபிள்ளையார் கோவிலடி கல்லூர் யாழ்ப்பாணம். 368

### கல்வி

திறமையான ஆய்வுவகுப்புக்களும், தனிப்பட்ட ... கீழ்க்கண்டவகுப்புகளுக்குண்டு: பி. ஏ., ஜி. ஏ: கியு, ஜி. சி. ஈ, உயர்தரம் கலை / விஞ்ஞானம் ஜி. சி. ஈ சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், ஜி. சி. ஈ, விஞ்ஞானம் ஆங்கிலம் / தமிழ் ... சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், சிங்களம் புக்கீப்பிங், ... தெல்லிப்பழை / 107 பருத்தித்துறை வீதி, ... யாழ்ப்பாணம். 385

### காணி விற்பனவு

நீர்வேலி தெற்கு வெங்காயச் சங்கத்திற்குப் பக்கமாகவும், நீர்வேலி தெற்கு வயிரவகோவிலுக்கு அண்மையிலுமுள்ள வடக்குப் பக்கத்திலுள்ள 3 அறைகள் கொண்ட 2 பரப்புக் காணியும் அதன் அருகிலுள்ள 8 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு. வீட்டைச் சேர்ந்த இரண்டு பரப்பைத் தனியும், 8 பரப்பை இரண்டாகப் பிரித்து தனித்தனியேயும், அல்லது ஒருமித்தும் விலைக்கு கொடுக்கப்படும். வாங்குபவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். விற்பனையாளர்: செ. செ. அம்புஜேஸ்மேற் பார்த்து ... 16 மடவீதி, யாழ்ப்பாணம். 388

### விற்பனைக்கு

பருத்தித்துறை காரியபதி காரி கந்தோர், இ. போ. ச டிப்போ, கந்தசுவாமி கோவில் ஆகியவற்றிற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடும், காணியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு நா. முத்துக்கிருஷ்ணா இலட்சுமிபதி, புலோலி கிழக்கு பருத்தித்துறை: 380

நலீமால் இன்டஸ்ரீஸ் தயாரிக்கும் ரெடிமேட் உடுப்புகளை விற்பனை செய்வதற்கு நன்றாக ஆங்கிலம் தெரிந்த ஓர் சேல்ஸ்மென் தேவை, திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். பிணைப்பணம் ரூபாய் 500/- கட்ட வேண்டும். 9-ம் திகதியும் 10-ம் திகதியும் காலை 9 மணியிலிருந்து 11 மணி வரை நேரில் தொடர்புகொள்ளவும், நலீமால் டெயிலரிங், 68, மெயின் வீதி யாழ்ப்பாணம். 366

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# விண்வெளியிற் கண்ட அந்த அதிசயப் பொருள்

## செயற்கைக்கிரகமே!

ஹௌஸ்டன், ஜூன் 6

பூமியை வலம் வரும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் தங்களது 38-வது சுற்றின் போதும் ஒரு விநோத பொருளைக் கண்டனர். 19-வது சுற்றின் போதும் 38-வது சுற்றின் போதும் இந்த அதிசயப் பொருள்களைக் கண்டது குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டனர். இதனைக் கேட்டு விண்வெளி நிலையக்கட்டுப்பாட்டு அதிகாரிகளும் சிந்தித்தனர்.

முதலில் கண்டனர். பின்னர் வியப்புற்றனர். தொடர்ந்து சிந்தித்தனர். முடிவு...... கப்பலில் இருந்தவாறே தீர்மானித்துவிட்டனர்!

விண்வெளியில் கண்ட அந்த அதிசயப் பொருள்...... செயற்கைக்கிரகங்கள் தான்!

'ஜெமினி' என்ற விண்வெளிக் கப்பலில் பூமியை வலம் வந்து கொண்டிருக்கும் விண்வெளி இரட்டையர்கள் இன்று இலங்கை நேரப்படி இரவு 10-30 மணிக்கு மேல் அத்லாந்திக்சமுத்திரத்தில் வந்து இறங்குவார்களென அறிவிக்கப் பட்டுள்ளது.

---

சர்வதேச

# பிரச்னைகளை ஆராய இது தருணமல்ல

## நாட்டின் நெருக்கடிகளை முதலில் தீர்க்கவேண்டும்'

கொழும்பு, ஞாயிறு

தேசிய அபிவிருத்திக்கு தேசிய ஒற்றுமை மிகவும் அவசியமாகும் என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் திரு. அல்பேர்ட் பீரிஸுக்கு நாத்தாண்டியாவில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் தான் பிரதமர் மேற்கண்டவாறு கூறினர்.

பிரதமர் தொடர்ந்துபேசுகையில் நாட்டின் ஒற்றுமையில் தான் முன்னேற்றம் தங்கியிருக்கிறது என்பதை மக்கள் இப்பொழுது நன்குணர்ந்துவிட்டனர் என்றும் இவை இரண்டுமே தேசிய அரசாங்கத்தின் இலட்சியங்களென்றும் கூறினர்.

"சிலர் நினைப்பதுபோல ஒரு சில மாதங்களில் எமது பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாது எம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை ஒவ்வொன்றாகத் தான் தீர்க்கமுடியும். ஆனால் சகல பிரச்னைகளுக்கும் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியமாதிரி தீர்வுகாணுவோம என்பதை உறுதியாக நான் கூறிவைக்க விரும்புகின்றேன்" என்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கூறினர்.

நாட்டின் நிதிநிலைமை மிகவும் மோசமாகவிருக்கிறது இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு உலக வங்கியுடன் பேச்சுகள் நடைபெற்றுவருகின்றன. நிதிநிலைமை ஓரளவு சரிவந்ததும் இங்கு பல சாதகமான சூழ்நிலைகள் உருவாகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

சர்வதேச பிரச்னைகள் குறித்து அவர் பேசுகையில் நாட்டில் பல நெருக்கடிகளும் தலைகாட்டியுள்ள இக்கட்டத்தில் சர்வதேசபிரச்னைகள் நமக்குமுக்கியமான தல்லவென்றும் அவற்றை ஆராய இதுநேரமல்லவென்றும் எமது மக்களின் இன்னல்களைக் களைந்தெறிவதே முக்கியமானதென்றும் கூறினர்.

### நீதியான சேவை

தபால் மந்திரி மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமா பேசுகையில் தேசிய அரசாங்கம் நீதியான முறையில் நாட்டை பரிபாலிக்கும் என்றும் படித்துவிட்டு வேலையில்லாமலிருக்கும் ஏராளமான இளைஞர்களுக்கு விரைவில் வேலைகள் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினர்.

### கடல் தொழில் அபிவிருத்தி

மீன்பிடி கைத்தொழில் மந்திரி திரு பிலிப் குணவர்த்தன பேசுகையில் கடற்தொழிலை அபிவிருத்தி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினர்.

ஆழ்கடல் மீன்பிடித் தொழில் அபிவிருத்தி செய்யப்படுமென்றும் அவர்கூறினர்

### ஒற்றுமை அவசியம்

சபாநாயகர் திரு. அல்பேர்ட் பீரிஸ் நன்றிதெரிவித்துப் பேசுகையில், இந்நாட்டில் உள்ள சகல மக்களும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் உழைக்கவேண்டுமென்றும் கூறினர்.

---

# ரூ 9 லட்சம் செலவில் குளிரூட்ட சாதன நிலையம்

பம்பலப்பிட்டி, திங்கள்

சந்தைப்படுத்தும் பகுதிக்கென ரூபா 9 லட்சம் செலவில் கட்டிடமுள்ள வட்டபுறுவசவில் நிர்மாணிக்கப் பட்டிருக்கும் குளிரூட்ட சாதன நிலையத்தை இன்று மாலை உணவு விவசாய மந்திரி திரு எம். டி. பண்டா திறந்து வைக்கவிருக்கிறர்.

ருஷ்ய உதவியுடன் பல்கேரிய என்ஜினியர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த குளிரூட்ட சாதன நிலையம், சிலகாலங்களில் ஏராளமாகக் கிடைக்கும் காய்கறி வகைகளை பழுதுபடாது சேமித்து வைக்கப் பெரிதும் உதவுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஓரளவில் வாழ்க்கைச் செலவைக் குறைக்க உதவுமெனவும் கருதப்படுகிறது.

---

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் தம்டனி ஒன்றுக்கு செந்தமான வான் ஒன்று கணேசபுரம் வாசியான திரு. எஸ் மாணிக்கம் என்பவரை மோதியதன் காரணமாக அவர் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். வான் சாரதி பொலிசாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து கிளிநொச்சிப் பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

---

# சமஷ்டி கிடைக்கா விடினும் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலமும் வன்னியசிங்கம் அரங்கை வந்தடைந்தன. ஊர்வலங்கள் வந்த வீதிகள் மூவர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீடுகள் தோறும் பூரணகும்பங்கள் வைத்து தலைவர்களுக்கு மாலைகள் அணியப்பட்டன.

திரு செல்வநாயகம் மேலும் குறிப்பிட்டதாவது-

### உரிமைகள் பல தர முன்வந்தது

கடந்த 9 வருடகாலமாக நாம் செய்த தியாகங்களின் பயனாக இன்று தமிழ்பேசும் மக்கள் ஓரளவு மதிக்கப்படுகின்றார்கள். நாங்கள் ஒரு போதும் பட்டம்பதவிகளை நாடவில்லை. நாட்டப்போவதுமில்லை. உரிமைகளைத் தான் நாடுவோம். எங்கள் கொள்கை பட்டம் பதவிகளல்லவென்பதை எதிர்க்கட்சியினரும் நன்கு உணர்ந்துள்ளனர். இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு எங்களுக்கு இப்பொழுது சிறு சந்தர்ப்பம்கிடைத்துள்ளது. இதற்குக் காரணம் 14 பாராளுமன்ற உறுப்பினர்களை எமது கட்சியிலிருந்து தெரிந்து அனுப்பியதேயாகும். சென்ற தேர்தலின் பின் போதிய பலத்துடன் அரசாங்கத்தைக் கைப்பற்றமுடியாத நிலையேற்பட்டது. இந்நிலையில் 14 அங்கத்தவர்களைகொண்ட எமது கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் பேச்சுவார்த்தை நடத்தின. நாங்கள் இருபகுதியினருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஐக்கியதேசியக்கட்சி நாம் இழந்த உரிமைகளில் பலவற்றைத் தரமுன்வந்தது. ஆனால் அவை இன்னும் கிட்டவில்லை. விரைவில் வாக்களிக்கப்பட்ட உரிமைகள் வழங்கப்படுவது நிச்சயம். அதில் முதலில் கிடைக்கவிருப்பது மொழியுரிமை. அதற்கு முன்னோடியாக பிரதேச சபைகள் அமைக்கப்படவிருக்கின்றன எமக்குக் கிடைக்கும் மொழியுரிமை வடக்கு கிழக்குமாகாணங்களில் தமிழ் ஆட்சிமொழியாகவும் மற்ற மாகாணங்களில் தமிழ்மூலம் தொடர்புகள் கொள்ளவும் வழிசெய்கிறது. இன்றைய நிலையில் இந்தச் சலுகையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தனிச் சிங்களம் தான் திணிக்கப்படும். இன்றைய சட்டப்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில்கூட சிங்களம் ஆட்சிமொழியாகவிருக்கும். இந்த நிர்ப்பந்தத்திலிருந்து எம்மைக் காப்பாற்றச் சமஷ்டிக் கொள்கையைக் கைவிடாமல் சில சலுகைகளை ஏற்றுள்ளோம்.

### பிரதேசம் இருப்பதால் வாழ்கிறோம்

அடுத்தது எமது பிரதேச உரிமை. எமக்கென ஒரு பிரதேசம் இருக்கிறபடியால்தான் நாம் தமிழர்களாக வாழக்கூடியதாகவிருக்கிறது. சிறுபான்மையினர் உரிமையுடன் தப்பிவாழ ஒரு பிரதேசம் வேண்டும். அதுதான் எமது வடக்கு கிழக்கு மாகாணங்களாகும். ஆனால் கிழக்குமாகாணத்தில் நடக்கும் சிங்களக் குடியேற்றத்தினால் அது சிங்களப் பிரதேசமாக மாறிவிடுமோவென்று அஞ்சுகின்றேம். இவற்றை நிவர்த்தி செய்யக்கூடியது சமஷ்டி ஆட்சி. சமஷ்டியாட்சி எமக்குக் கிடைத்தால் தமிழ்நாட்டில் நம்மை நாம் ஆழ்வோம். அதைத் தர ஒரு சிங்களக் கட்சியும் தயாராகவில்லை.

### சமஷ்டி கேட்டிருந்தால் கிடைத்திருக்கும்.

1947 ம் ஆண்டு 50க்கு 50 கேட்ட நேரத்தில் சமஷ்டி ஆட்சி கேட்டிருந்தால் பிரிட்டிஷார் தந்திருப்பார்கள். இப்போது உள்ள நிலையிலெமக்கு சமஷ்டி கிடைக்காதுபோல் தோன்றுகிறது. ஆனாலும் சமஷ்டிக் கோரிக்கையை கைவிட்டுப்போவதில்லை. ஒரு பாஷைக்கு மேல் உள்ள நாடுகளில் சமஷ்டிதான ஏற்றது என பதை பலநாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

சமஷ்டி ஆட்சி கிடைக்கமுடியாவிட்டாலும் மாவட்டசபைகள் மூலம் எமது உரிமைகளில் சிலவற்றை நாம் பெறலாம். அது கிடைத்தால் உள்நாட்டு விவகாரங்களில் நம்மை நாம் ஆட்சிசெய்யலாம். இதைத்தர அரசாங்கம் சம்மதித்துள்ளது. இது நாங்கள் கடந்த ஒன்பது வருடங்களாக செய்த தியாகத்தின்மூலம் கிடைக்கவிருக்கிறது.

### தமிழ்ப்பிரதேசத்தின் பொருளாதாரம்

பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் திரு க. துரைரத்தினம் "தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்தி என்னும் பொருள் பற்றிய பேசுகையில் கூறியதாவது.

எங்களுடைய தமிழ் பிரதேசம் பொருளாதாரத் துறையில் தனித்தியங்கக்கூடிய நிலையில் இருக்கிறதா என பலர் கேட்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் தமிழ்ப்பிரதேசம் இப்போது உள்ள வாழ்க்கை வசதிகளைப்போல் இரண்டு மடங்கான வாழ்க்கை வசதிகள் அளிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. தமிழ்பிரதேசம் இலங்கையின் மூன்றில் ஒரு பகுதியாகும் மற்றவர்கள்கூறுவதைப்போல் இது ஓர் வரண்டபிரதேசமல்ல. வளமுள்ள பிரதேசமாகும். இதனால்தான் சிங்களமக்கள் அதிகம் குடியேறுகின்றார்கள். இஸ்ரேலும் எமது பிரதேசத்தைப் போலத்தான் ஆனால் அங்கு உள்ளதிலும் பார்க்க இங்கு மழை அதிகம், நாங்கள் மழைநீரைச் சேமித்து வைத்துப் பிரயோசனப்படுத்தத் தவறிவிட்டோம். ஆனால் அவர்கள் மழைநீரை மிகவும் கவனமாகச் சேமித்து வைத்து ஆக்கவழியில் செலவிடுகிறார்கள்.

சாதியை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு கைக்கொள்கிறேமோ அவ்வளவுக்கு அவ்வளவு பொருளாதார வீழ்ச்சியடையும், நாம் உப்பைமூலப்பொருளாக வைத்துக்கொண்டு பலகைத்தொழில்களை ஆரம்பிக்கலாம். பருத்தித்துறையிலிருந்து ஆனையிறவுவரை இலங்கை முழுவதற்கும் தேவையான சுண்ணாடிப் பொருட்களை உற்பத்திசெய்யக் கூடிய மண் இருக்கிறது, 890 தொன்மண்ணைப் பாவித்தால் ஒருலட்சம் ரூபாய் சுத்தலாபம் கிடைக்கும். இலங்கை முழுவதற்கும் தேவையானமுந்திரிகைப்பருப்பு இன்னும் சிலவருடங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து விநியோகிக்கக்கூடியதாக இருக்கும்,

நாம் புதிய காய்கறிகளை உற்பத்தி செய்வதுடன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாழைகளையும் பயிரிடவேண்டும்.

மீன்பிடி மந்திரி தயாரித்துள்ள ஒரு திட்டப்படி இலங்கையிலிருந்து 50 கோடி ரூபாய் பெறுமதியான மீன் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும். இதை நாம் சரியாகப் பயன்படுத்தினுல் நமது பகுதியிலிருந்து மட்டும் 30 கோடி ரூபாய் பெறுமதியான மீன் ஏற்றுமதி செய்ய முடியும்.

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பின தமிழரசுக்கட்சிப் பொதுக்காரியதரிசியுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழ் உரிமை பற்றியும் மாவட்டசபைகள் பற்றியும் அரசாங்கம் பேசிக்கொண்டபடி சில திட்டவட்டமான கொள்கைகளைப் பாராளுமன்றத்தில் சிம்மாசனப்பிரசங்கத்தில் வெளியிட்டது. இதை தமிழ்க்காங்கிரசும் ஆதரித்து வாக்களித்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் வந்து அவற்றைக் கண்டிப்பது பெரிய தவறு. தாமதம் ஆபத்தை ஏற்படுத்தலாம். 1960 ஆடிமாதம் சிறிமாவோ அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் எமது பிரச்னைகளைத் தீர்க்க ஆவல் கொண்டனர். ஆனால் ஆளும் கட்சியிலேயே பிளவும் போட்டியும் ஏற்பட்டு அதிதீவிர வகுப்புவாதப் போக்கில் அந்த அரசாங்கம் போய் முடிந்தது. அதுபோன்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமுன் இன்றைய நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி எமது உரிமைகளைப் பெறவேண்டியதே இன்றைய தேவை 'வட்டமேசை' என்று கூறிக் காலதாமதம் செய்வது எமது இழந்த உரிமைகள் பெறுவதைத்தடைப்படுத்துமேயன்றி எந்த நன்மையையும் தரப்போவதில்லை

நியாயவாதி திரு மு ஆலாலசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

மாவட்டசபைகள் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை தராது என மகாநாடு கூட்டிக் கூறும் அரசியல் தலைவர்கள் மாவட்டசபைகள் அமைப்பதாகக் கூறிய சிம்மாசனம் பிரசங்கத்தை ஆதரித்து வாக்களித்தது எதற்காக? அதே அரசாங்கத்தில் இன்னும் அங்கம் வகிப்பதேன்? யாழ்ப்பாணத்திற்கு வரும்பொழுது எல்லாக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் மாவட்டசபைத் திட்டத்தை திட்டித்தீர்க்கும் தமிழ் பிரதிநிதிகள் இதுவரை பாராளுமன்றத்தில மாவட்டசபை பற்றி ஒரு வார்த்தையாவது பேசியதுண்டா? அரசியல் நாகரிகம் தெரிந்தவர்களாக இருந்தால் தமக்கு ஒவ்வாத கொள்கையுடைய தேசிய அரசாங்கத்தில் இன்னும் அங்கம் வகிக்கமாட்டார்கள்,

தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் எந்தக் கட்சியின் மூலம் தீர்க்கப்பட்டாலும் தமிழ் மக்கள் நன்மையடைவார்கள்.

தமிழ் மக்களின் நன்மையில் நாட்டம் கொண்டவர்களாகவிருந்தால், தமிழ் மக்களுக்குத் தொண்டாற்றுவது உண்மையானுல் சென்ற 5 வருடங்கள் மௌனமாக இருந்தது போல இன்னும் 5 வருடங்கள் அமைதியாக இருந்து தமிழரசுக் கட்சியினர் தமிழர் பிரச்னைகளை எப்படித் தீர்க்கப்போகிறார்கள் என்பதை கவனித்த பின் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்,

திருவாளர்கள் ஜே. பி. வின்சென்ற், க. நடராசா, அ. குமரகுரு, மயிலை சிவசண்முகதாசன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர்.

திரு. க. சிவலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர். இசைமணி ஆனந்தசிவம் வாழ்த்து பாடினர். திரு. மு. தி. வீரசிங்கம் வாழ்த்துரை வழங்கினர். பிரம்மஸ்ரீ க. துரைசாமிக்குருக்கள் ஆசியுரை வழங்கினர். திரு. சுந்தரமூர்த்தி நன்றியுரை கூறினர்.

---

# மணியோடர் ஒப்படைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்வாய்

"ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த 25 ரூபாய் (சாதாரண) மணியோடர் கேற்று தகுந்த அத்தாட்சிகளுடன் உரியவரிடம் கொடுக்கப்பட்டது.

---

# இறைச்சி விற்பனையில் மோசடி

கல்முனை, திங்கள்

கல்முனை பட்டின சபை எல்லைக்குள் இருக்கும் கல்முனை சந்தையில் ஆட்டிறைச்சி வியாபார ஸ்தலங்களில் மோசடி நடைபெற்றுவருவதாக புகார் கூறப்படுகிறது.

1 றுத்தல் ஆட்டிறைச்சியின் விலை ரூபா 2-50 சதம் என விற்பனைப்பலகையில் பொறிக்கப்பட்டிருந்த போதிலும், வியாபாரிகள் பொதுமக்களிடம் 3 ரூபா அறவிடுவதாகக் கூறப்படுகிறது.

இதுவிஷயமாக கூடிய கவனம் எடுத்து, இந்த மோசடியிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவேண்டுமென வரியிறுப்பாளர் சங்கம் பட்டின சபைத் தலைவரையும், அங்கத்தவர்களையும் கேட்டுள்ளதாக தெரியப்படுகிறது.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 62-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது!